JL
V211m,N76
ON26
1861/20

JL
V211 ..., N74
N74
186120

1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம்

தமிழரசு

இலவச இணைப்பு

பதிப்புரை

இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் வகையில் சமூகநலத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருவதை அனைவரும் அறிவோம். முதியோர் உதவித்தொகைத் திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டம், மனிதனை மனிதன் வைத்து இழுக்கும் கொடுமையை அகற்றிட சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், உடல் ஊனமுற்றோருக்கு நல்வாழ்வு வழங்கும் திட்டம் போன்ற பல அரிய திட்டங்களை நமது அரசு வகுத்துள்ளது. அந்தத் திட்டங்களைப் போன்று சமூகத்திலுள்ள எல்லா மக்களின் எதிர்கால வாழ்விலும் புத்தொளியைப் புதிய நம்பிக்கையை உருவாக்கும் வகையில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தையும் இப்போது நமது அரசு கொண்டு வந்துள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று அறிவிக்கப்பட்டு, பண்டித நேரு அவர்களின் பிறந்த நாளன்று—தொடக்கப்பட்டுள்ள இத்திட்டம் பற்றிய விவரங்களோடு முதல்வர் அவர்கள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் பற்றி விடுத்துள்ள 'அன்பழைப்பை' வண்ணப் படங்களாக்கித் தொடக்க விழாச் சொற்பொழிவுகளின் சுருக்கங்களையும், நிதித்துறைச் செயலாளரின் கருத்தையும், பத்திரிகைகளின் பாராட்டையும் தொகுத்து **'1974 ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டம்'** என்னும் பெயரில் தமிழரசு 1-12-74 இதழின் இலவச இணைப்பாக வெளியிடுவதில் பெரிதும் மகிழ்கிறோம்.

சென்னை,
1-12-74.

செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு ... நூலகம்
186120

1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம்

சமூக நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தும் நற்பணியில் தமிழக அரசு என்றுமே முன்னணியில் நிற்கிறது.

1974 ஜனவரி முதல் நாளில் தமிழ்நாடு குடும்ப நலத் திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. அரசு ஊழியர்கள், உள்ளாட்சி மன்ற ஊழியர்கள், மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோரின் குடும்பங்களின் பாதுகாப்புக்காக வரையப்பட்ட இத்திட்டம் மொத்தம் 6.5 இலட்சம் பேருக்கு நன்மை பயக்கின்றது. ஊழியர்களின் நலனைப் பாதுகாத்ததுடன் நின்றுவிட விரும்பாத தமிழக அரசு, பொது மக்களின் நன்மைக்காக, மற்றொரு திட்டத்தையும் தமிழக மக்களின் முன் வைக்கிறது. இது தான் தமிழ் நாடு அரசின் 1974-ஆம் ஆண்டு சமூக நலப் பாதுகாப்புத் திட்டம்.

ஒருவர் வேலை செய்து சம்பாதிக்கும் காலத்தில், தொடர்ந்து, இடைவிடாமல் சிறு தொகை ஒன்றைச் செலுத்தி வந்தால் அவருக்கு, பிற்காலத்தில் மாதாமாதம் கணிசமான ஓய்வூதியத் தொகை இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும். ஓய்வூதியத் தொகை முப்பது ஆண்டுகளுக்குக் கிடைத்து வரும். ஓய்வூதியக் கால அளவு முடிந்த பின் மொத்தத் தொகை ஒன்றும் இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும்.

இத்திட்டத்தில் சேர வயது வரம்பு கிடையாது; நுழைவுக் கட்டணம் இல்லை. சிறுவர் பெயரில்கூட கணக்குகளைத் தொடங்கலாம்.

நான்கு வகை சந்தாத் தொகைகள் இத்திட்டத்தின் கீழ் உண்டு. மாதம் ஒன்றுக்கு ரூ. 10, 20, 30, 60 செலுத்தலாம். ஏழு வகை சந்தாத் திட்டங்கள் உள்ளன; அவை பின்வருமாறு:

திட்டம்	A	B	C	D	E	F	G
மாத சந்தாத்தொகை (ரூபாய்)	10	10	10	10	20	30	60
சந்தாக் கால அளவு ஆண்டுகள்	10	15	20	25	20	15	10
மாத ஒய்வூதியம் (ரூபாய்)	20	35	60	100	100	100	100
மொத்த ரொக்கத் தொகை (ரூபாய்)	1,500	2,500	4,000	5,500	8,000	8,000	9,500

ஒவ்வொரு வகைத் திட்டத்தின்கீழும், சந்தாதாரர், தாம் செலுத்தும் தொகையைப்போல் பன்மடங்குத் தொகை பெறுவார். இது எப்படிச் சாத்தியம் என்ற கேள்வி எழுகிறதா? உங்கள் பணத்தை முதலீடு செய்யும் பொறுப்பை அரசு ஏற்கிறது. அதற்குக் கிடைக்கும் வட்டியைப் பல்கிப் பெருக்கி, எந்த விதமான ஆதாயத்தையும் எதிர்பார்க்காமல், உங்களுக்குக் கொடுக்கும் பணியைச் சிரமேற்றுச் செயல்படுத்த முற்படுகிறது. இத்திட்டத்தின் நிர்வாகச் செலவுகளையும் அரசே ஏற்கின்றது.

உதாரணமாக முதலில் குறிப்பிட்டுள்ள திட்டவகையைப் பார்ப்போம்.

ஒருவர் 1975-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு 10 ஆண்டு காலத்திற்கு மாதந்தோறும் ரூ. 10 சந்தா செலுத்துகிறார் என்று வைத்துக்கொள்வோம்.

அவருக்கு 1985-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1- ஆம் நாள் முதற்கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 ஒய்வூதியம் கிடைக்கும்.

முப்பதாண்டுக் காலத்துக்குள், அதாவது 2015-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாளுக்கு முன்பு அவர் இறக்கநேரிட்டால், அவரது நியமனதாரருக்கு இந்த ஒய்வூதியம் முதலில் குறிப்பிட்ட 30 ஆண்டுகளுக்கு அதாவது 1—1—2015 வரை தொடர்ந்து கொடுக்கப்படும்.

சந்தாக் காலத்திற்குள் அவர் இறக்க நேரிட்டால், அதாவது 1984 டிசம்பர் மாதச் சந்தாத்தொகை செலுத்தப்படுவதற்கு முன் அவர் இறக்க நேரிட்டால், அப்பொழுது அவரது நியமனதாரர்—

(அ) சந்தாதாரர் அதுவரை செலுத்தியுள்ள தொகையை ஆண்டு ஒன்றுக்கு 7 சதவீத தனி வட்டியுடன் சேர்த்துப் பெறலாம்.

அல்லது

(ஆ) நியமிக்கப்பட்டவர் இக்கணக்கைத் தொடர்ந்து நடத்தி வரலாம்; அதாவது 1984 டிசம்பர் திங்கள்முடிய அத்திங்களுக்கான சந்தாத் தொகையைச் செலுத்தி வரலாம். அவ்வாறு செலுத்திவந்தால், அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 ஒய்வூதியத்தொகை 1—1—1985 முதற்கொண்டு முப்பதாண்டுகளுக்கு கொடுக்கப்படும்.

மேற்சொன்ன ஒய்வூதியத் தொகையைத் தவிர, மொத்தத் தொகை ஒன்றும் கொடுக்கப்படும். விவரம் பின்வருமாறு :—

(அ) ஒய்வூதியக் கால முடிவில், அதாவது 1—1—1985 லிருந்து 30 ஆண்டுகளுக்குப் பின், மொத்தத் தொகையாக ரூ. 1,500 கொடுக்கப்படும்.

(ஆ) சந்தாதாரர் விரும்பினால், மொத்தத் தொகையில் பாதியை அதாவது ரூ. 750 ஒய்வூதியக் கால ஆரம்பத்தில அதாவது 1—1—1985 அன்று பெறலாம். அதன் பின்னர் அவருக்குப் பாதி ஒய்வூதியத் தொகைதான் கிடைக்கும். அதாவது அவருக்கு மாதம் ஒன்றுக்குக் கொடுக்கப்படத் தக்க ரூ. 20 ஒய்வூதியத் தொகையில் பாதியான ரூ. 10 தான் அவருக்குக் கிடைக்கும்.

''டி'' வகைத் திட்டத்தின் கீழ் இதே போன்று, 25 ஆண்டுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10 செலுத்தினால் அதன் பின்னர் 30 ஆண்டுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 கிடைக்கும். அதைத் தவிர மொத்தத் தொகையாக ரூ. 5,500 கிடைக்கும். சந்தாதாரர்களின் வசதிக்கேற்ப சந்தாத் தொகையும் சந்தாக் கால அளவும் அமையும் வகையில் பல்வேறு வகைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன.

இத்திட்டத்தின்கீழ் சந்தாத் தொகைகள் செலுத்துவதற்கு வசதியாக பல்வேறு வங்கிகளுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தகைய வங்கிகளின் எல்லாத் தமிழ்

நாட்டுக் கிளைகளிலும் சந்தாத் தொகை செலுத்தலாம். தமிழ்நாடு முழுவதிலும் பரவியுள்ள 1,600 இந்த வங்கிக் கிளைகளில் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

இந்தத் திட்டத்தில் சேருவதற்கான விண்ணப்பப் படிவங்கள் கீழ்க்கண்ட வங்கிகளின் எல்லாக் கிளைகளிலும் கிடைக்கும்.

அலஹாபாத் பாங்க்
ஆந்திரா பாங்க் லிமிடெட்
இந்தியன் பாங்க்
இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்
கத்தோலிக் சிரியன் பாங்க் லிமிடெட்
கர்நாடகா பாங்க் லிமிடெட்
கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்
கனரா பாங்க்
கார்ப்பரேஷன் பாங்க் லிமிடெட்
கும்பகோணம் சிடி யூனியன் பாங்க் லிமிடெட்
சிண்டிகேட் பாங்க்
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
தஞ்சாவூர் பர்மனென்ட் பாங்க் லிமிடெட்
தமிழ்நாடு மர்கென்டைல் பாங்க் லிமிடெட்
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்
தேனு பாங்க்
நெடுங்காடி பாங்க் லிமிடெட்
நியுபாங்க் ஆப் இந்தியா லிமிடெட்
பஞ்சாப் நேஷனல் பாங்க்
பாரத் ஓவர்சீஸ் பாங்க் லிமிடெட்
பாங்க் ஆப் இந்தியா
பாங்க் ஆப் மஹாராஷ்டிரா
பெடரல் பாங்க் லிமிடெட்
மதுரை பாங்க் லிமிடெட்
யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
யூனியன் பாங்க் ஆப் இந்தியா
லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்
விஜயா பாங்க் லிமிடெட்
வைஸ்யா பாங்க் லிமிடெட்
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
ஸ்டேட் பாங்க் ஆப் பாட்டியாலா
ஸ்டேட் பாங்க் ஆப் ஸௌராஷ்டிரா
ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத்
ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர்

திட்டங்கள் அனைத்தும் வெற்றியடைய...

- ஆளுநர் உரை -

நாட்டிலுள்ள எளியவர்க்கும், நலிந்த பிரிவினருக்கும் சமூகப் பாதுகாப்புக்கு உறுதியளிக்கின்றபோதுதான் உண்மையான ஜனநாயகம் மலர்ந்து மணம் வீசுகிறது எனலாம். இந்தியா ஒரு மிகப் பெரிய நாடு. இங்கே ஒருசில வகைப் பற்றுக்குறைகள் நாடு முழுதும் இல்லாவிட்டாலும் நாட்டின் சிற்சில பகுதிகளிலே எளிதாகத் தோன்றி பரவி இடர் விளைவிக்கின்றன. எனவே மக்களில் பெரும்பான்மையோர் தங்களுக்கு இவற்றிலிருந்தெல்லாம் நல்ல பாதுகாப்பு இருக்கிறதென்று நம்பினுலொழிய அவர்கள் பொது வாழ்வில் நாட்டின் நன்மைக்காக தங்களால் இயன்றதைச் செய்ய இயலாது என்பதோடு அவர்கள் தங்களை வாழ்வில் சாதாரண அளவில்கூட உயர்த்திக் கொள்ளவும் இயலாது. எனவேதான் பெரும்பான்மை மக்களுக்குக் குறைந்த அளவு வசதியாயினும் அளிக்கப்படுவதற்காக தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படுகின்ற நலங்கெழு அரசு எனப்படும் ராமராஜ்யத்துடன் இத்தகைய குறிக்கோளுடைய ஜனநாயக சோஷலிசம் சமமாகப் பாவித்து உரைக்கப்படுகிறது.

சோஷலிசக் கொள்கை இந்தியாவுக்குப் புதியதன்று. இந்நாட்டில் தோன்றியுள்ள கடைப்பிடிக்கப்படுகின்ற சமயங்கள் ஒவ்வொன்றும் எளியவருக்குப் பணிபுரிவதையோ தமது அடிப்படைக் கருத்தாகக் கொண்டுள்ளது. எனவேதான் ''வறியவனுக்குச் சேவை செய்வதே சொர்க்கத்திற்குத் திறவுகோல் ஆகும்'' என்று முன்னோர் உரைத்துச் சென்றனர்

அண்ணல் காந்தியடிகள் உரைத்த ''அறங்காவலர் முறைக் கொள்கை'' வன்முறையை நாடாமலேயே சோஷலிசத்தைப் பரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். அனைவருக்கும் சமவாய்ப்பளித்தல், பொருளாதார வலிமை ஓரிடத்தில் குவியாவண்ணம் பார்த்துக் கொள்ளுதல் ஆகிய கருத்துக்கள், நல வாழ்விற்கு அடித்தளங்களாக அமைந்து செல்வரானோர் வறியவரை எஞ்ஞான்றும் சுரண்டிக் கொழுப்பதை ஒழிப்பதற்குக் கருவிகளாகவும் கருதப்பட்டன. ஜனநாயக அமைப்புகள் மக்களின் உண்மையான எண்ணங்களைப் பிரதிபலிப்பதாக அமையவேண்டுமானால், பெரும்பான்மையான மக்களின் உண்மையான பிரதிநிதியாக அரசு விளங்க வேண்டுமானால், மக்கள் நன்கு அறிவு பெற்றிருந்தால் ஒழிய-அரசியல் பொருளாதார சமூக வகையில் நசுக்கப்படாமல் இருந்தாலொழிய நாம் வயது வந்த அனைவருக்கும் அளித்துள்ள வாக்குரிமையானது பயனற்றதாகும்.

எனது கருத்தினை விளக்க வின்ஸ்டன் சர்ச்சில் தொடர்பான துணுக்கு ஒன்றை எடுத்துக்காட்டாக நான் கூறுவது வழக்கம். இந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது சர்ச்சில் இங்கிலாந்தில் பிரதமராக இருக்கவில்லை. அவரை பி.பி.சி. யில் பேச அழைத்திருந்தார்கள். அவருக்கு அங்கு புறப்படுவதற்குச் சிறிது காலதாமதமாகிவிட்டது. அவர் வழியில் சென்ற ஒரு டாக்ஸியை நிறுத்தி ஏறிக்கொண்டு தன்னை பி.பி.சி. நிலையத்திற்குக் கூட்டிச்செல்லுமாறு கேட்டுக் கொண்டார். டாக்ஸி டிரைவருக்கு வண்டியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்தான் சர்ச்சில் என்பது தெரியாது—அந்த டிரைவர் ''ஐயா இன்றைக்கு வண்டி வராது'' என்று மறுத்தார். சர்ச்சில் ''ஏனப்பா வண்டி வராது என்கிறாய்?'' என்று கேட்டார். அவன் சொன்னான் ''ஐயா இன்றிரவு எட்டு மணிக்கு சர்ச்சில் வானொலியில் பேச இருக்கிறார். ஆகவே நான் விரைவாக வீட்டுக்குச் சென்று சர்ச்சில் பேச்சைக் கேட்க வேண்டுமென விரும்புகிறேன்.' ஒரு டாக்ஸி டிரைவர்கூட தனது பேச்சைக் கேட்க ஆவலாக இருக்கிறார் எனும் செய்தி சர்ச்சிலைப் பெரிதும் மகிழ்வித்தது. அவர் தனது கோட்டுப் பையிலிருந்து ஒரு பவுனை எடுத்து அந்த டிரைவர் கையில் கொடுத்தார். அதைப் பெற்றதும் அந்த டிரைவர் இப்படி எண்ணினார். இந்தப் பெரிய மனிதர் பி.பி.ஸி-க்கு கூட்டிச் செல்வதற்கு முன்பே ஒரு பவுன் கொடுக்கிறார். பி.பி.ஸி-க்குக் கூட்டிச் சென்றால் இன்னும் அதிகமாகவே கொடுப்பார். எனவே அவன் அவரை நோக்கி ''ஐயா கனவானே வண்டியில் உட்காருங்கள். நான் உங்களை இதோ பி.பி.ஸி-க்கு விரைந்து கொண்டு செல்கிறேன். அந்த சர்ச்சில் எக்கோடோ கெட்டுப் போகட்டும் எனக்கென்ன வந்தது'' என்றானாம். அப்படியென்றால் டாக்ஸி டிரைவர் டிரைவர் சர்ச்சில் மீது கொண்டிருந்த மதிப்பையும் மரியாதையையும் ஐந்து நிமிட நேரத்தில் ஒதுக்கிவிட்டான் என்பதா பொருள். நிச்

சயமாக இல்லை. பின் என்ன காரணம்? விரைந்து பணம் சேர்க்கவேண்டுமென்ற தற்காலிகமான கட்டாயத் தேவையே இந்தக் குழப்பத்தை விளைவித்தது. இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஒன்று உண்டு.

நமது நாட்டைப் போன்று வளர்ந்து வருகிற நாடொன்றில் ஒவ்வொரு நாளும் தற்காலிகமாகத் தோன்றுகின்ற பொருளாதார சமூக, அரசியல் வகையிலான கட்டாயத் தேவைகள் முழு வளர்ச்சிப் பெறாத நமது ஜனநாயகத்தின் அடித்தளத்தை அரித்து வருகின்றன. இதற்கெதிராக நாம் அளிக்கக்கூடிய மிகச் சிறந்த பாதுகாப்பு மக்கள் மனதில் தமக்குப் பாதுகாப்பு உண்டு எனும் உணர்வை ஏற்படுத்த வேண்டும். இதனைச் செய்ய முயற்சி மேற்கொள்கின்ற எந்த அரசும் ஜனநாயகத்தையே ஒரு வாழ்க்கை நெறியாக ஆக்கும் உளவியல் முறையை நீருற்றி வளர்க்கிறது எனலாம். பலவகைப்பட்ட சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை நவீன உலகு நமக்கு அளித்துள்ளது—பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் முதியோர் உதவித் தொகை, முதியோர் காப்பு இல்லம் வேலையற்றோர்க்கு காப்புறுதி ஆகியவை சமூகப் பாதுகாப்பையும் பொருளாதாரச் சுதந்திரத்தையும் உறுதி செய்துள்ளன.

நமது மதிப்பிற்குரிய முதல்வர் கலைஞர் டாக்டர் கருணாநிதி அவர்களின் சோஷலிச நடவடிக்கைகள் அவருக்கு ஜனநாயகத்தின்பால் உள்ள முழு நம்பிக்கையுடன் பின்னிப் பிணைந்தனவாகும். அவர்கள் இத்தகைய சிறந்த பல நடவடிக்கைகளை முன்னரும் செயல்படுத்தியுள்ளார்கள். அவையெல்லாவற்றையும்விட மிக முக்கியத்துவம் வாய்ந்தது அவர் வகுத்தளிக்கும் இந்த மாபெரும் திட்டம். இது பொது மக்கள் யாவருக்கும், குறிப்பாக குறைந்த வருவாய் பெறுகின்ற வகையினராக உள்ள மாதச் சம்பளக்காரர்கள் சொந்த தொழில் செய்வோர் ஆகியோருக்குப் பெரும் நன்மை பயப்பதாகும் இத்திட்டம் என்பது மிகையன்று.

நமது நலத்திட்டங்களில் பெரும்பாலானவை அரசுப் பணியாளர்கள் பல்வேறு நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு உரியனவாகவே உள்ளன. சமூகத்தின் அடித்தளத்திலுள்ள குறைந்த வருமானம் உடையயோர் சொந்த தொழில் செய்வோர் ஆகியோர் இத்திட்டங்களின் கீழ் வருவதில்லை. வருங்காலத்தைக் கவலையுடன் நோக்கும் இவர்களின் மனத்துயரை நீக்கும் வகையில் இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாகத் திகழ்கிறது. ஒருவர் தான் பணிபுரியும் போது மாதந்தோறும் குறைந்த ஒரு தொகையைச் செலுத்துவதன்மூலம் அவருக்கு அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு மாதந்தோறும் ஒரு கணிசமான ஓய்வு ஊதியம் பெற இத்திட்டம் வகை செய்கிறது. இந்த ஓய்வு ஊதியம் மூப்பதாண்டுக் காலத்திற்கு அளிக்கப்படும். ஓய்வூதியக் கால இறுதியில் ஒரு மொத்தத் தொகை ஒன்றை அளிக்கவும் உதவி

செய்கிறது. எறும்பு மழைக்காலத்திற்காகச் சிறிது சிறிதாக உணவுப் பொருட்களை மெதுவாக ஆனால் அதே நேரத்தில் ஒரே சீராகச் சேமித்து வைப்பதுபோல் மனிதன் தன் வயது முதிர்வுக் கா்லத்திற்காக சிறுது சிறிதாகச் சேமித்து வைக்க வேண்டும்.

இத்திட்டத்தின் முழுப் பயனையும் ஏற்றுக் கொள்ள் மக்கள் பெருமளவில் முன் வருவர் என்பதிலும் வருங்காலத் திற்கான பாதுகாப்பின்மை குறித்து எவரும் கவலைப்படாத காலம் மலர்வதற்கு நீண்ட நாள் இல்லை என்பதிலும் எனக்கு ஐயமில்லை. தொகை செலுத்த இயலாதவருக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட் டம், உடல் ஊனமுற்றோர் மறு வாழ்வுத் திட்டம் மற்றும் ஏனைய திட்டங்கள் போன்ற பல்வேறு நல நடவடிக்கைகள் முன்னேற வாய்ப்பற்றோருக்குரியனவாகும்.

''உங்களது கண்டுபிடிப்புகள் எல்லாம் ஏழையின் நலனைக் கருத்தில் கொள்ளவில்லையாயின் உங்களுடைய பணிக்கள் அனைத்தும் சைத்தானுடைய பணிக்களைக் காட்டிலும் மோசமானது'' என்று காந்தியடிகள் ஒரு முறை கூறினார். மக்களின் பணிக்காகத் தன்னையும் தனது அரசை யும் அர்ப்பணித்துக் கொண்டுள்ள டாக்டர் கலைஞர் கருணா நிதி பாராட்டுக்குரியவராவார். ஏழ்மையை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரே வழி கிராம அளவில் இருந்து திட்ட மிடுவதுதான் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதைப் போல் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்போரையும் ஏழை எளியவரையும் கவனிப்பதன் மூலம் மட்டுமே வளங்கெழு அரசை உருவாக்க முடியும் என்பது உலகெங்கும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். இது புதியதோர் அறிவார்ந்த திட்டமாகும். இத்திட்டம் சிறு சேமிப்புகளின் மூலம் வரு வாய் வளங்களை உருவாக்குகிறது. வேலை வாய்ப்புகளை அதி கப்படுத்தும் வகையிலும் மக்கள் வளங்கான வழிகோலும் வகையிலும் இத்திட்ட வளவாயில்கள் பயன்படுத்தப்படும். இது ஒரு கூட்டுறவு முயற்சியாகும். வளத்தைப் பெருக்கு வதற்கான பெரும் திட்டம் ஒன்றின் பங்குதாரர்களாக ஆவதற்கு மக்கள் ஒருநாளும் தயங்கமாட்டார்கள். ஏனெனில் அவ்வளத்தின் பயன் பாமர மனிதனையே சென்றடைகிறது.

இத்திட்டத்தின் வெற்றி அமைதி, வள வாழ்வு ஆகிய வற்றிற்கு வகை செய்வதைப் பெறுத்தே இருக்கின்றது. நாட்டிற்கு வழிகாட்டியாக தமிழ்நாடு இத்திட்டத்தை வெற்றியுடன் செயல்படுத்திக் காட்ட எல்லாம் வல்ல இறை வன் அருள்புரியட்டும். இத்திட்டம் வெற்றிபெற வேண்டு மென்று நான் வாழ்த்துகின்றேன்.

[1974-ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டம் தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து....]

இன்றும், தன்னுடைய
ஒரு வயதுக் குழந்தை
மாதத்தின் பெயரால்
தமிழ்நாடு சமூகப்
பாதுகாப்புத் திட்டத்தின்
கீழ், வங்கி யொன்றில்
பத்து ரூபாய் கட்டுகிறாள்.
இதற்கான கணக்குக்
கையேட்டையும் பெற்றுக்
கொள்கிறாள்.

மரகதத்தின் கணவன் ஜனார்த்தன், வங்கியி
லிருந்து வாங்கின ஒரு பேனாவைத் தம்பித்துரையின்
கையிலே கொடுத்து, பாட்டி தங்கத்திடமும், தாத்தா
முத்தையா விடமும் வாழ்த்து பெற்றுக் கொள்ளச்
சொல்கிறான்.



மாதவம், மாதாமாதம் வங்கியிலே
[illegible] ஐநூறு ரூபாய் பெறுகிறாள்.
அவளுக்காக அவளது ஒரு வயதிலேயே
அவள் தாயார் தங்கம் கட்டத் தொடங்கி,
தொடர்ந்து கட்டிவந்த மாதாந்திரப் பத்து
ரூபாய் சேர்த்த [illegible] காலம்
முதிர்வடைந்து, இப்போது மாதம் ஐநூறு
ரூபாய் வரத் தொடங்கிவிட்டது. மாதவம்,
அதிலும் ஒரு பகுதியைத் தம்பித்
துரைக்காகத் [illegible] வங்கியின் சேமிப்
பாதுகாப்புத் திட்டத்தில் கட்டத் தொடங்கினாள்.
தம்பித்துரையின் படிப்பு முடிய மாதாந்திரச்
செலவுக்கு உதவ சேமிப்புப் பாதுகாப்புத் திட்டத்தில்
கிடைக்கிற தொண்ணூறு ரூபாய்
பயன்படுகிறது. தங்கமும்,
மாதவமும் திருப்தியடைகிறார்கள்.



18/6/20

வெள்ளை வெளேரென்ற தலையுடனும்
வெற்றிலைப் பாக்குக் கறைபடிந்த, பல்லற்ற
பொக்கை வாயுடனும் தங்கம் தன்னுடைய
முப்பத்தாறு வயதுப் பேரன் தம்பித்துரை
யின் வரவை எதிர்பார்த்து வீட்டில்
உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கு வயது
ஒன்றும் அதிகமில்லை எழுபத்தைந்து தான்.
அப்போது, "அம்மா! பாட்டீ!" என்று
ஆசையுடன் அழைத்தவாறு தம்பித்துரை,
ஒரு ஸ்கூட்டரைத் தள்ளிக்கொண்டு
வீட்டுக்குள் வருகிறான்.
"அடே! இது ஏதடா!, ஸ்கூட்டர்?"
என்று பொக்கைவாயில் புன்னகை
சிந்த, தங்கப்பாட்டி கேட்கிறாள்.

"நீ வாங்கிக் கொடுத்தது தான் பாட்டி"
புரியவில்லையா? நீ, அம்மம்மா,
தொழிற்சாலை பிரச்னைப்போது
சேமிப்பாக காப்புத் திட்டத்தில் பணம்
கிட்டுமே! அதற்கு முப்பது வருடம்
மாதம் ஒரு ரூபாய் வீதம் கட்டி
வந்தது. இப்போது, முப்பது வருடம்
முடிந்து, மொத்தத் தொகை

ஆயிரத்து ஐநூறு
ரூபாய் வந்தது.
அதில் வாங்கியது தான்
இந்த ஸ்கூட்டர்!
" என்கிறான் வாலிபமும்
வசீகரமும் மிக்க தம்பித்துரை.
இதனைக் கேட்டபாட்டி மகிழ்கிறாள். அன்பு
புன்னகை புரிகிறாள். தம்பித்துரையின் மனைவி
காவேரி, மைத் தீட்டிய கண்ணசைவுடன்
முறுவலித்து நிற்கிறாள்."

இன்னும் இருபத்தைந்து ஆண்டுக்
கழித்துதானே பலன் கிட்டும் என்று
எண்ணி, அப்போது அலட்சியப்படுத்தப்பட்ட
திட்டத்தில் சேராமல் இருந்துவிட்டாள், இப்போது
இந்தத் திட்டத்தில் இவ்வளவு இன்பம்
இருக்கிறதே" என்று ஏங்கிப் பார்த்து, தன்னைத்
தானே நொந்து கொள்கிறாள்.

கண்ணையாத் திட்டம் தீட்டம், விழித்துக்
கொண்டாள். கண்டு மனது தான் என்றும்
எதிர் காலத்தில் சிக்கனமாக நடக்கப்போகிற
நம்பிக்கையான ஒன்று என்ற மகிழ்வில்
திளைத்திருக்கிறாள்.

இந்த மகிழ்ச்சி, தமிழகத் திட்
டங்களுடைய இலட்சியம்
உதயமாகட்டும் இந்த உதயத்தைக்
காண்பதற்கே, தமிழக அரசு,
தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத்
திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கி
றது. இதை, அனைவரும் பயன்
படுத்திக் கொள்ள வேண்டுமென்று
அன்போடு அழைக்கிறேன்.

சமதர்மத் திட்டங்களின் வெற்றிக்கு......

''தமிழ்நாட்டில் புதியதொரு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அருகுபோல் வேரூன்றி ஆல்போல் தழைத்து இத்திட்டம் வெற்றி பெறவேண்டும்.

''மனித சமுதாயத்திற்கு வழிகாட்டு சிந்தனைகளை-திட்டங்களை எடுத்துரைத்த நேரு பிறந்தநாளில் இத்திட்டம் தொடங்கப்படுகிறது. அவர் கண்ட கனவுகளை நனவாக்குகிறோம். அத்தகைய நல்ல திட்டங்களைப் போன்ற இத்திட்டமும் வெற்றி பெற்று சமுதாயத்திற்கு நல்ல பயன் கிடைக்க அனைவரும் ஆசிகூற வேண்டும். வரவுக்கு ஏற்றவகையில் செலவு செய்தாலே வளமுடன் வாழமுடியும்.

''நமது பொருளாதாரத்தில் பெரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. நோயின் கொடுமை அதிகமானால் சிகிச்சையும் கடுமையாக்கிக் கசப்பு மருந்து சாப்பிட வேண்டியுள்ளது போல நமக்கு நாமே சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

''சேமிப்புதான் நம்முடைய வாழ்க்கைக்கு மிக அடிப்படையாக உள்ளது. கடன் வாங்கியாவது சேமிக்க வேண்டியது கட்டாயமாகும். உதாரணமாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வாங்கி வீடுகட்டிக் கொள்கின்றோம். கொஞ்சம் கொஞ்சமாக நமது தவணைகளைச் செலுத்திய பிறகு வீடு நமக்குச் சொந்தமாகிறது. எனவே சமதர்மத் திட்டங்களின் வெற்றிக்குச் சேமிப்பு மிக அவசியமாகும். சமூக நலனை உத்தேசித்து இப்பணியில் நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டும்.''

சி. சுப்பிரமணியம்,
மத்திய அரசு நிதியமைச்சர்.

(1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டத் தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)

இந்தத் திட்டம் எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் அறிவிக்கப்பட்டு, இந்தியாவின் தலைசிறந்த ஜனநாயகவாதியான பண்டித நேரு அவர்கள் பிறந்த நாளில் இன்று தொடங்கப்படுவது மிகப் பொருத்தமுடைய ஒன்றாகும்.

நிதியமைச்சர் பேசுகையில் இந்த விழாவின் தொடக்கமே ஒரு புதுமையாக இருக்கிறது என்று குறிப்பிட்டு, முற்றிய தேங்காயைப் புதைத்து, உடனடியாக ஒரு தென்னை மரம், அதிலேயிருந்து தேங்காய் குலுங்கி விழுகிற காட்சி இவைகளைப் பார்க்கும்போது, நந்தன் ஏன் ஒரே நாளில் பயிரிட்டு அறுவடை செய்திருக்க மாட்டான் என்று தோன்றுகிறது என்று பழைய புராணத்தை நாமெல்லாம் நம்ப வேண்டுமென்று இந்தத் தென்னை மரத்தைப் பயன்படுத்திக் கொண்டு கேட்டார். ''அதைப் போலத்தான் இது என்று சொன்னார்களா? அல்லது இதைப் போலத்தான் அது என்று சொன்னார்களா? என்று நமக்குப் புரியவில்லை. என்றாலும், உடனடியாக நாட்டு மக்களுக்குப் பலன் கிடைக்க வேண்டும் என்ற ஆசை நம்முடைய நெஞ்சங்களில் அலைமோதுகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் இந்த அடையாளச் சின்னத்தை இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு நாம் வைத்திருக்கிறோம்.

இந்தத் திட்டத்திற்கு என்ன சின்னம் வைக்கலாம் என்று நானும் தலைமைச் செயலாளரும், நிதித் துறைச் செயலாளரும், மற்றவர்களும் கலந்து பேசியபோது எனக்கு பழைய கால கிராமத்தின் விடுகதை ஒன்று நினைவிற்கு வந்தது. ''ஆழக்குழி தோண்டி அதிலே ஒரு முட்டை புதைத்து அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை, அது என்ன?'' என்று விடுகதை போட்டு, ''அது தென்னை மரம்'' என்று சொல்வார்கள். ஆகவே இது விடுகதையாக ஆகிவிடக் கூடாது. சமுதாயத்திலே இது உண்மைக் கதையாக ஆக

வேண்டுமென்று தமிழக அரசு எண்ணியதின் விளைவுதான் இந்தச் சமுதாயப் பாதுகாப்புத் திட்டமாகும்.

ஆளுநர் அவர்கள் பேசுகையில் தன்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களை எல்லாம் இதற்கு வாரி வழங்கி, இது எப்படிச் செயல்படும், எந்தெந்த மக்களைத் தொடும் என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். நிதியமைச்சர் பேசுகையில் சேமிப்பின் இன்றியமையாமையையும், சேமிப்பின் மூலம் ஒரு சமுதாயம் எப்படிப்பட்ட பொற்காலத்தை அடைய முடியும் என்பதையும், அரசாங்கத்தின் திட்டங்கள் மத்தியிலும், மாநிலத்திலும் எந்த அளவிற்கு ஒத்துழைப்போடு நடைபெற வேண்டும் என்பதையும் எடுத்துச் சொன்னார்கள்.

மாநிலங்கள் மத்திய அரசின் திட்டங்களுக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்கள் சொன்ன நேரத்தில், எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துத்தான் சொன்னார்களே அல்லாமல், அவர் தமிழ் நாட்டில் பேசிய காரணத்தால், தமிழ் நாடு ஒரு வேளை ஒத்துழைக்கவில்லையோ, அதனால் அப்படி நிதியமைச்சர் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டதோ என்று எண்ணத் தேவையில்லை. இன்று இந்தியாவில் மத்திய அரசின் திட்டங்களை, மத்திய அரசில் உள்ளவர்களே மிகவும் பாராட்டத்தக்க வகையில் நடைமுறைப்படுத்தி வருகிற சில மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலங்கள் மத்திய அரசின் திட்டங்களுக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்கின்ற அதே வாதத்தோடு மத்திய அரசும் மாநில அரசுகளின் கஷ்டங்களை உணர வேண்டும் என்ற வேண்டுகோளையும் இணைப்பது — எப்படி மத்திய அமைச்சருக்கு அதைச் சொல்வது அவருடைய கடமையாக இருந்ததோ, அதைப்போலவே இதைச் சொல்வதும் என்னுடைய கடமையாகும்.

சி. சுப்ரமணியம் : (குறுக்கிட்டு) இரண்டையும் சேர்த்துத்தான் சொன்னேன்.

முதல்வர் கலைஞர் : இரண்டையும் சேர்த்துச் சொல்வதாகத்தான் அவர்கள் இப்போது சொல்கிறார்கள். ஆகவே நாங்கள் பேசியதில் எந்த விதமான கருத்து மாறுபாடும் யாருக்கும் இருக்கத் தேவையில்லை.

பொதுவாகத் தமிழ் நாடு அரசின் சார்பில் காந்தியடிகள் சொன்ன 'அடித்தளத்து மக்களுக்காகப் பாடுபட வேண்டும்' என்ற கொள்கையை மனதில் இறுத்தி, ஏற்றதாழ்வற்ற சமதர்ம சமுதாயம் என்ற குறிக்கோளிலிருந்து நழுவாமல், சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்காக நாம் பாடுபட்டு வருகிறோம். தொடர்ந்து இந்த அரசின் சார்பில் செய்யப்பட்டு வருகிற, கண்ணொளி வழங்குகிற திட்டம் ; பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்; ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம்; அரசு அலுவலர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்ற வகையில் சாதாரண, சாமான்ய மக்களைத் தொடுகின்ற பல திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகிறோம்.

அரசு அலுவலாளர்களுடைய குடும்பப் பாதுகாப்புத் திட்டம் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, அவர்களுடைய ஊதியத்திலிருந்து 10 ரூபாயைப் பிடித்துக் கொண்டு, அப்படிக் கட்டியவர்கள் திடீரென்று இறந்துவிட்டால், அந்தக் குடும்பத்தினருக்கு ஆறுதல் வழங்கும் வகையில் 10 ஆயிரம் ரூபாயை தமிழக அரசின் சார்பில் தந்து வருகிறோம். இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு ஏழு மாதங்களே ஆகின்றன. இந்தக் குறிப்பிட்ட காலத்தில் ஏறத்தாழ நானூறு குடும்பங்கள் இந்த உதவியைப் பெற்றிருக்கின்றன. இதில் 90 சதவிகிதம் கடைநிலை ஊழியர்கள், ஆசிரியர்கள், காரோட்டிகள் என்ற நிலையில் உள்ளவர்களாகும்.

அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தை நாம் இன்றைக்கு உருவாக்கியிருக்கிறோம். இதில் அரசு அலுவலாளர்கள் மட்டுமின்றி அவர்களையும் உள்ளிட்டு, தமிழ் நாட்டு மக்கள், வயது வரம்பிபு எதுவுமில்லாமல் இந்தத் திட்டத்திலே சேரலாம் என்கிற நிலைமையில் வகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைப் பற்றிய விளக்கங்களை எல்லாம் கையேடுகளில், சிறு சிறு புத்தகங்களாக அச்சேற்றித் தரப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றை மாத்திரம் இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதிலே 'ஏ'-யிலிருந்து 'ஜி'-வரை பல நிலைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக 'ஏ' என்பதை எடுத்துக் கொண்டால் பத்து ரூபாய் வீதம் பத்தாண்டு காலத்திற்கு கட்டுவார்களானால் அவர்களுக்குப் பத்தாண்டு காலத்திற்குப் பிறகு மாதம் இருபது ரூபாய் வீதம் முப்பது ஆண்டுகளுக்கு அளிக்கப்படுகிறது. அவர்கள் மொத்தம் கட்டுவது 1,200 ரூபாய் என்றால், அவர்கள் மொத்தமாகப் பெறக்கூடிய தொகை 8,700 ரூபாய் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இங்கே சிறிய சிறிய குழந்தைகள் இந்தத் திட்டத்தில் சேர்ந்த காட்சியை நாம் கண்டோம். அந்தக் குழந்தைகளுக்கு இன்றைக்கு ஐந்து வயது என்றால் அவர்கள் இருபத்தைந்து ஆண்டு காலம் பத்து ரூபாய் வீதம் கட்டி முடித்தால், அதற்குப் பிறகு முப்பது ஆண்டு காலத்திற்கு மாதம் நூறு ரூபாய் வீதம் நிச்சயமாக அந்தக் குழந்தை பெரியவனாகிப் பெறக் கூடிய ஒரு நிலை உருவாகும். முப்புது ஆண்டு காலத்திற்கு அப்படி நூறு ரூபாய் வீதம் கிடைத்து, அந்த முப்பது ஆண்டு காலம் முடிந்த பிறகு மொத்தமாக ஒரு 5,500 ரூபாய் பெறக்கூடிய நிலையும் இதிலே உள்ளது. அந்தக் குழந்தை மொத்தத்தில் கட்ட வேண்டிய தொகை மூவாயிரம் ரூபாய் ஆகும். ஆனால் அவன் திரும்பப் பெறப்போகிற தொகை ரூ. 41,500 என்பதையும் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு சீரிய திட்டம்—உடனடியாக நாளையே பலன் அளிக்காது என்றாலும், இப்போதும் கிராமத்தில் வழங்கக்கூடிய ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது. ஒரு தோட்டத்தில் ஒரு வயதான கிழவன் ஒரு மாங்கொட்டையை நட்டுக் கொண்டிருக்கும்போது, பக்கத்தில் ஒரு சிறுவன் போய், 'அதை ஏன் நடுகிறாய்?' என்று கேட்க, 'இது மரமாகி நல்ல மாங்காய்களைத் தரும்' என்று முதியவன் சொல்ல, அந்தக் குறும்புக்கார சிறுவன் 'இதை நீயா சாப்பிடப் போகிறாய்?' என்று கேட்டபோது, அந்த முதியவன் பக்கத்தில் இருந்த மாமரத்தைக் காட்டி, 'அந்த மாமரம் இருக்கிறதே, அது என்னுடைய தாத்தா நட்டது; அதிலிருந்து கிடைக்கிற பழங்களை நான் சாப்பிடுகிறேன்; இப்போது இங்கே நான் வைக்கிற இதிலிருந்து கிடைக்கக் கூடிய மாங்கனிகளை இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகு என்னுடைய பேரன், கொள்ளுப்பேரன் ஆகியோர் சாப்பிடுவார்கள் ; ஒவ்வொருவரும் நாமா சாப்பிடப் போகிறோம் என்று உன்னைப் போல எண்ணிக் கொண்டிருந்தால், நாம் யாரும் மாமரங்களையே கண்டிருக்க முடியாது; மாங்கனிகளைத் தின்றிருக்கவும் முடியாது. ஆகவே, நமக்காக அல்ல; நாம் செய்கிற காரியங்கள் 'எதிர்காலத் தலைமுறைக்காகப்' பயன்பட வேண்டும்; என்ற இந்தக் கருத்தை கிராமப்புறத்தில் உள்ள கிழவன் மூலமாக பாலப் படமாகத் தந்திருக்கிறார்கள்.

நம்முடைய மத்திய நிதியமைச்சர் பேசுகிற நேரத்தில் 'இதை ஒரு கட்சிச் சார்பாக ஆக்கக் கூடாது' என்று கூறியதை நான் நூற்றுக்கு நூறு வரவேற்கிறேன். அதைப் போலவே, ''இதைக் கட்சிச் சார்புள்ள அரசு நடத்துகிறது என்று யாரும் கருதாமல் அனைவரும் இதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்''.

கட்சி என்றால், அடுத்த தேர்தலைப் பற்றி எண்ணும் ; ஆனால் சமுதாயத்தின் எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணினால்தான் வருங்காலச் சந்ததியினருக்கு நன்மை பயக்கும்; அடுத்தத் தேர்தலைப் பற்றி எண்ணாமல் இருக்க வேண்டும் என்று, அரசியல்வாதி என்ற முறையில் நான் கூறமாட்டேன்; ஆனால் அடுத்தத் தேர்தலைப் பற்றி எண்ணுவது மட்டுமல்லாமல், அடுத்த தலைமுறையினரைப் பற்றியும் நாம் எண்ண வேண்டும் என்ற அந்த எண்ணத்துடன்தான் காந்தியடிகள் ஆனாலும், பண்டித நேரு அவர்களானாலும், எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களானாலும், அறிவுரை கூறினார்கள். அதன்படிதான் இந்த அரசு நடைபோட்டு வருகிறது என்று கூறி, இந்த இனிய விழாவிற்கு தலைமையேற்று வாழ்த்துரை வழங்கிய ஆளுநர் அவர்களுக்கும், பல அலுவல்களுக்கிடையே டெல்லியில் நாடாளுமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில் நம்முடைய அழைப்பையேற்று இந்த விழாவிற்கென வந்து, தொடங்கி வைத்த மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் இயக்கமாக மலரட்டும்

ச. குகன், ஐ.ஏ.எஸ்.
நிதித்துறைச் செயலாளர்
தமிழ்நாடு அரசு

தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி, சேமிப்பின் அடிப்படையிலேயே அமையும் என்பது வெளிப்படை. குடும்பங்களது சேமிப்பும், நிறுவனங்களுடைய சேமிப்பும் அரசுகள் மூலம் திரட்டப்பட்டு, பொதுமக்களனைவருக்கும் பயன் தரும் அரசுச் செலவுகளுக்கும், அரசு முதலீடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. தனிப்பட்டோர், அல்லது குடும்பங்களது சேமிப்பு, நாட்டின் மொத்தச் சேமிப்பில் 80 சதவீத அளவிற்கு அமைந்துள்ளது.

திட்டமிட்டு, பொருளாதார வளர்ச்சிக்காக செயல்பட்டு வரும் சென்ற இருபது ஆண்டுக்கு மேற்பட்ட காலத்தில், வேளாண்மை, தொழில் வளர்ச்சி, அடித்தள வசதிகள் ஆகியவற்றில் செய்யப்பட்ட முதலீடுகளின் விளைவாக, தமிழ்நாட்டில் உற்பத்தி அளவு, வேலைவாய்ப்புகள், வருமான நிலைகள் ஆகியவற்றில் பெரும் உயர்வு ஏற்பட்டுள்ளது. இவற்றின் விளைவாகத் தனிப்பட்டவர்களது நுகர்வு நிலைகளும் உயர்ந்துள்ளன. இத்தகைய உயர்வுடன் கல்வி, மக்கள் நல்வாழ்வுப் பணிகள், குடும்ப நலத் திட்டம், ஊட்டச் சத்துணவு வழங்கல், குடிநீர் வழங்கல், சாலைகள் அமைத்தல், வீட்டு மனைகள் வழங்கல், வீடுகள் கட்டித் தருதல், கிராம மின் இணைப்புத் திட்டம் இன்ன பிற அவசியமான அடிப்படை வசதிகளும் அரசின் முயற்சியால் உருவாகியுள்ளன. இந்தத் துறைகள் எல்லாவற்றிலும் தமிழ்நாட்டில் தொடர்ந்து பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, கீழ் மட்டத்தில் உள்ள மக்களது நலன்களை மேம்படுத்தும் கருத்துடன் முன்னேற்ற முயற்சிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் சிறப்புத் திட்டங்களாகத் தொடங்கப்பெற்ற பிச்சைக்காரர் நல்வாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்கும் பணி, சைக்கிள் ரிக்ஷாகும் பணி, சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் ஆகியவை. நமக்கிடையே உள்ள துயர் உறும் மக்களது நிலையை அறிந்து, அத்துயரை நீக்கும் முயற்சிகளாக உருப்பெற்றன. அமரர் காந்தியடிகளால் சிறப்பித்துப் பாராட்டப்பட்ட ஜான் ரஸ்கின் ''அடித்தளத்திலுள்ள மனிதனும் எல்லா நலன்களும் பெற வேண்டும்'' என்ற கோட்பாட்டை வலியுறுத்தினார். சமூக நலனுக்காகத் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், அவ்வாறு கடைத்தட்டிலுள்ளவர்கள் வரை பயன் தரும் முறையில் விரிவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. சமூகப் பாதுகாப்புப் பற்றி புது முறையில் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம். திக்கற்றவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் 1962-ஆம் ஆண்டில் உருவாயிற்று. 1974-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் ஆக மொத்தம் 7 இலட்சம் பேர் பயன் பெற்று வரும் குடும்ப நல நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பணியில் இருக்கும்போது, இறந்துபோகும் ஊழியரது குடும்பத்தினருக்கு, மொத்தமாக ரூ. 10,000 வழங்க இத்திட்டம் வகை செய்கின்றது. தொடங்கிய 9 மாதங்களில் 462 குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர். இவர்களுள் 90 சதவீதத்தினர் கடைநிலை ஊழியர், காவல்துறைக் காவலர், ஓட்டுநர், மேஸ்திரி, ஆரம்பப்பள்ளி ஆசிரியர் போன்ற குறைந்த ஊதிய நிலையில் உள்ளவர்களே. தாம் பொருளீட்டும் கால கட்டத்தில் ஒரு சிறு தொகையைத் தொடர்ந்து செலுத்தி, அதற்குப் பதிலாக வயதான நிலையில் பாதுகாப்பு பெறும் கொள்கையின் பலனை பொதுமக்களில் யாராக இருந்தாலும் பெறுவதற்கு, தமிழக அரசின் 1974-ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டம் வழி வகுத்துத் தருகின்றது. சம்பளம் பெறுவோர், தானே தொழில் நடத்துவோர், ஆடவர், மகளிர், சிறுவர், இளைஞர் முதியோர் எனப் பல்வகை நிலையிலுள்ளவர்களும் பயனடையத் தக்க திட்டம் இது.

இத்திட்டத்தின் கீழ் ஏழு வகைகளில் கணக்குகள் ஆரம்பிக்கலாம். மாதம் 10 ரூ. வீதம் 25 ஆண்டுகளோ, மாதம் ரூ. 20 வீதம் 20 ஆண்டுகளோ, மாதம் ரூ. 30 ரூ. வீதம் 15 ஆண்டுகளோ, மாதம் ரூ. 60 வீதம் 10 ஆண்டுகளோ செலுத்தினால், மாதம் ரூ. 100 வீதம் மாத ஓய்வூதியம் பெற முடியும். பணம் செலுத்திய பின், குறுகிய காலத்தில் பணம் செலுத்தியவர் இறக்க நேரிட்டாலும், மொத்தம் 30 ஆண்டுகளில் எஞ்சியுள்ள பகுதிக்கு மாத ஓய்வூதியம் அவரால் நியமிக்கப்பட்டவருக்கு தரப்படும். மாத ஓய்வூதியமாக ரூ. 100 பெற விரும்புவோர், இந்த நான்கு முறைகளில் தங்களுக்கு ஏற்ற ஒன்றின்படி, பணம் செலுத்தலாம்.

குறைவான ஊதியம் பெறுபவர்கள் மாதம் ரூ. 10க்கு மேல் சேமிப்பது கடினமானது. மாதம் ரூ. 10 செலுத்தும் முறைகள் நான்கு உள்ளன. மாதம் ரூ. 10 வீதம் 10 ஆண்டுகள் செலுத்தினால், பின்னர் மாத ஓய்வூதியம் ரூ. 20 கிடைக்கும்; 15 ஆண்டுகள் செலுத்தினால் ஓய்வூதியம் ரூ. 35 ஆக இருக்கும்; 20 ஆண்டுகள் செலுத்தினால் ஓய்வூதியம், ரூ. 60 கிடைக்கும்; 25 ஆண்டுகள். செலுத்தினால் ஓய்வூதியம் ரூ. 100 ஆக அமையும்; 30 ஆண்டுகள் ஓய்வூதியம் அளிக்கப்பட்ட பிறகு பணம் செலுத்தியவருக்கு, அவர் எடுத்துள்ள கணக்கு முறையின் அடிப்படையின் மொத்த தொகை ஒன்றும் அளிக்கப்படும். விரும்பினால், இந்த மொத்தத் தொகையில் பாதியை ஓய்வூதியம் தொடங்கும்போதே பெறலாம். அப்போது ஓய்வூதியம் பாதியாகக் குறைந்து விடும்.

பணம் செலுத்தும் முறைகளில் எதன்படி பார்த்தாலும் பணம் செலுத்துபவர் செலுத்தும், பணத்தை விடப் பன்மடங்கு பலனை அடைகின்றார் என்பது தெளிவாகும். வருகின்ற பணத்தை அரசு ஏற்றவாறு முதலீடு செய்து இலாப நோக்கின்றி, அப்பணத்தைப் பெருக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாலேயே, இது சாத்தியமாகின்றது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செலவை அரசு தனது



செலவுகளில் ஒரு பகுதியாகவும் ஏற்கின்றது.

பல்வேறு நிலைகளுக்கேற்ப, இத்திட்டத்தின் கீழ், பணம் செலுத்துவதை மாற்றி அமைத்துக் கொள்ளவும் முடியும். குறைந்த ஆண்டுகளுக்கு மட்டும் மாதம் ரூ. 10 செலுத்த எண்ணியவர், பின்னர், நீண்ட காலக் கணக்காக அதனை மாற்றிக் கொள்ளலாம். 10 ஆண்டு கணக்கில் சேர்ந்தவர், அதனைப் பின்னால் 15, 20 அல்லது 25 ஆண்டுக் கணக்காக மாற்றிக் கொள்ளலாம்; 15 ஆண்டுக் கணக்கில் சேர்ந்தவர், 20 அல்லது 25 ஆண்டுக் கணக்காக மாற்றிக் கொள்ளலாம். அவ்வாறே 20 ஆண்டுக் கணக்கில் சேர்ந்தவர் 25 ஆண்டுக் கணக்காக மாற்றிக் கொள்ளலலாம்.

பணம் செலுத்துபவர், அவர் எடுத்துள்ள கணக்குக் காலம் முடியும் முன்னர் இறக்க நேரிட்டால், அவரால் நியமிக்கப்பட்டவர், தொடர்ந்து கணக்கு முடியும்வரை பணம் செலுத்தி, ஓய்வூதியத்தை 30 ஆண்டுகள் வரை பெறலாம், அல்லது அவ்வாறு நியமிக்கப்பட்டவர், அதுவரை கணக்கை முதலில் எடுத்தவர் செலுத்திய பணத்தை 7 சத வீத வட்டியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

பணமாகவோ, பண அஞ்சலாகவோ, காசோலையாகவோ அல்லது பங்கு பெறும் 32 வங்கிகளுடனும் அல்லது தமிழ் நாட்டிலுள்ள அவற்றின் 1650 கிளைகளுடனும் தக்க ஏற்பாடு செய்தோ இதற்கான தொகையைச் செலுத்தலாம்.

சம்பளத்திலிருந்தே மாதாந்திரப் பிடித்தம் செய்து பணம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்வதன் மூலம், இத் திட்டம் மாதச் சம்பளம் பெறுபவர்களுக்கு மிகவும் ஏற்றது. பலரை வேலையில் அமர்த்தியுள்ள நிர்வாக அமைப்புகளும், உதவி பெறும் வருங்காலச் சேமிப்பு நிதியாக (Contributory Provident Fund) இத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக நிர்வாகமும், ஊழியருமாகச் சேர்ந்து பணியில் இருக்கும் காலமான சுமார் 20 ஆண்டுகள், ஒவ்வொருவரும் மாதம் ரூ. 10 வீதம் செலுத்தி, ஊழியருக்கு 30 ஆண்டு காலத்திற்கு மாதம் ரூ. 100 ஓய்வூதியத்துக்கு வழி செய்யலாம்.

நல்ல திட்டம் ஒவ்வொன்றும், ஒரே நேரத்தில் பல்வேறு நன்னோக்கங்களை நிறைவேற்றும். சேமிப்பை உயர்த்துதல், முதலீடு செய்வதற்குள்ள பணத்தை அதிகரித்தல், சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை அடையும் வகையில் நிதிக் கட்டுமான திட்டமாக இத்திட்டம் அமையும். [illegible] மின்சார உற்பத்தி செய்த பின்னர் வேளாண்மைக்குப் பயன்தருகின்ற நீர்த்தேக்கத்தை ஒத்தது இத்திட்டம். எனவே விரைந்து இத்திட்டத்தில் சேர்ந்து மக்கள் இயக்கமாக இதனை மலரச் செய்க!


1974-ஆம் ஆண்டு
தமிழ்நாடு
சமூகப்
பாதுகாப்புத்
திட்டம்
தமிழரசு
இலவச
இணைப்பு